சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திரு. மா. தம்புராஜ், த/பெ (லேட்) எஸ். மாரீஸ்வரன் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் – பணிவரன்முறை செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, ஐப்பசி மாதம் 02–ம் நாள்

அரசாணை (டி) எண்.645

நாள் : 19.10.2023

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.5, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப.7) துறை, நாள். 21.01.2022.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 36509/ஆர்3/2011. நாள் 18.05.2023.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கோவில்பட்டி, கீழமுடியன் கால்நடை கிளை மருந்தகத்தில், கால்நடை ஆய்வாளர் நிலை–2 ஆக பணியாற்றி 15.05.2006 அன்று மறைந்த திரு.எஸ்.மாரீஸ்வரன் என்பவரது மகன் திரு.மா.தம்புராஜ், என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க, தனியரது விண்ணப்ப நாளுக்கு பின்னர் பெற்ற கல்வித் தகுதி மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட நாளில், தனியருக்கு 18 வயது பூர்த்தியடையாத காரணத்தினால் இந்நிகழ்வினை சிறப்பு நிகழ்வாக கருதி, தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)–ஐ தளர்வு செய்தும் மற்றும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020–க்கு விலக்களித்தும் தனியரை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்ய கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் இயக்குநரின் கடிதத்தில், கோவில்பட்டி, கீழமுடியன் கால்நடை கிளை மருந்தகத்தில், கால்நடை ஆய்வாளர் நிலை–2 ஆக பணியாற்றி 15.05.2006 அன்று பணியிடை மரணமடைந்த திரு. எஸ். மாரீஸ்வரன் என்பவரது மகன் திரு. மா. தம்புராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் தூத்துக்குடி மண்டலம், திருச்செந்தூர் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, அவர் 08.06.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும், எனவே தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில்

சேர்ந்த நாளான 08.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இந்நிலையில், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு. மா. தம்புராஜ், த/பெ (லேட்) எஸ். மாரீஸ்வரன் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் அவர் பணியில் சேர்ந்த நாளான 08.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. தனியரது பணி வரன்முறை தொடர்பாக அவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யுமாறும், தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. அவற்றை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணைக்கு மனிதவள மேலாண்மைத்துறையின் கடித எண்.3248/A2/2023-1, நாள்.07.09.2023ன்படி அத்துறையின் ஒத்திசைவு பெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திரு. மா. தம்புராஜ், இளநிலை உதவியாளர் (இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35 வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18 (பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்,

<u>நகல்</u>
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-09.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உபரிப்படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

உதவி இயக்குநர்
கால்நடை பராமரிப்புத் துறை
திருச்செந்தூர்

9/10/2023
(சோ. மீனலோச்சனி)
அரசு சார்புச் செயலாளர்
19.10.23